நாள்: 09.03.2026.
O.S. No. 4/2023
பெயர்: முஜிபுர் ரகுமான் த/பெ. அப்துல் ரகீம்
வா.சா.3

**<u>1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :–</u>**

சாட்சியமளிக்க நீதிமன்ற அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். வாதிகளுக்காக சாட்சியமளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். முதல் விசாரணை சாட்சியத்தை வாதிகள் வழக்கறிஞர் தான் தயார் செய்தார் என்றால் சரிதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது என்றால் சரிதான். முதல் விசாரணை சாட்சியத்தில் நான் குடியிருக்கும் வீடானது எனது மனைவிக்கு சொந்தமான வீடு என்றாலும் அதை நான் தான் அவருக்கு செட்டில்மென்ட் ஆவணம் மூலம் எழுதி வைத்தேன் என்றாலும் சரிதான். அந்த சொத்து எனது தந்தை பெயரில் இருந்த சொத்து என்றால் சரிதான். அந்த சொத்துக்கு மூல ஆவணம் உண்டா என்றால் உண்டு. அந்த மூல ஆவணத்தை மறைத்து தான் எனது பெயருக்கு பட்டா வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடன் பிறந்தவர்கள் 5 நபர்கள். அந்த சொத்தை நான் தனிப்பட்ட முறையில் எனது உடன்பிறந்தவர்களுக்கு பிரித்து கொடுக்காமல் முழுவதுமாக அபகரித்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி வாதிகள் வீட்டிற்கும், எனது வீட்டிற்கும் இடையே வசிக்கிறார் என்றால் சரிதான். எனது மனைவி வாதிகளுக்கு எதிராக அ.வ.எண்22/2022 என்ற வழக்கு தொடர்ந்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கில் 1ம் பிரதிவாதியின் தந்தை பெயர் ஜபர்லான் என்பதற்கு பதிலாக முகமது ஜபருல்லா என்று குறிப்பிட்டு உள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் வா.சா.2 விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 12/2014 என்ற வழக்கில் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி இவ்வழக்கின் 4ம் வாதி பெயரை மெகராஜ்கனி என்பதற்கு பதிலாக மெகராஜ்நிஷா என்று தவறுதலாக பெயரை மாற்றம் செய்து அவர்களுக்கு எதிராத 1ம் பிரதிவாதி நீதிமன்ற தீர்பாணை பெற்றுள்ளார் என்றால் சரிதான். எனது மனைவியும் இவ்வழக்கின் வாதிகளும் 1ம் பிரதிவாதிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளதால் நான் இவ்வழக்கின் வாதிகளுக்கு ஆதரவாகவும் பிரதிவாதிகளுக்கு எதிராகவும் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

Sd/.***

District Munsif -Cum- Judicial Magistrate,
Nannilam.